Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 47 | thalaivaasaltv@gmail.com | புதன்கிழமை | நவம்பர் 18, 2020

# யாழ்.பல்கலை. மாணவர்கள் மோதல் சம்பவம்

## 3 பேருக்கு ஒரு வருடத் தடை, 4 பேருக்கு 6 மாதங்கள் தடை




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் 8 ஆம் திகதி மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட தனிநபர் விசாரணை ஆயத்தின் சிபார்சுக்கமைய, சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை வழங்கு

03

## மாட்டுப்பண்ணை விவகாரம்: பிரதமர் மகிந்தவுக்கு கடிதம் எழுதிய கஜேந்திரகுமார்!



மட்டக்களப்பு பண்ணையாளர்களை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவசர கடிதம் அனுப்பியுள்ளார்.

03

## தடையை உடைத்து நினைவுகூருவோம் சிவாஜி சபதம்



நவம்பர் 27மாவீரர் தின நினைவேந்தலை செய்வதற்கு நாம் யாரிடமும் அனுமதி பெறத் தேவையில்லை என முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார் .

யாழில் இன்று நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

03

### கட்டாய கலியாணம் செய்துவைக்க முடியாது

## கஜேந்திரன்கள் இணங்காவிட்டால் வெட்டிவிடுங்கள்

### தமிழ்க் கட்சிகள் கூட்டத்தில் காரசாரம்

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இயங்கும் கட்சிகள் கூடி தமிழீழ மாவீரர் நாள் நினைவேந்தலை அனுட்டிப்பது தொடர்பாக இன்று மாலை ஆராய்ந்துள்ள நிலையில் குறித்த கூட்டத்திலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கலந்து கொள்ளாமல் தவிர்த்திருக்கின்றது.

இந்நிலையில் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த கட்சிகள் சில, தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் இந்தச் செயற்பாட்டிற்கு தமது கடுமையான கண்டனத்தை தெரிவித்திருக்கின்றனர். குறிப்பாக கட்டாயப்படுத்தி காலியாணம் செய்துவைக்க முடியாது.

கஜேந்திரன்களின் உறுதியான தீர்மானம் என்ன என்பதை அறியுங்கள். அவர்களுக்காக ஒவ்வொரு கூட்டங்களிலும் தீர்மானங்களை நிறைவேற்று

03

## 30 நிமிடங்களுக்குள் கொரோனா பரிசோதனை இலங்கையில் இன்றுமுதல் அமுல்



கொரோனா வைரஸ் நோயாளிகளை அடையாளம் காண்பதற்காக மேற்கொள்ளப்படும் துரித அன்டிஜென் பரிசோதனைகளை இலங்கையில் இன்று முதல் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

03



# மாவீரர் நாள் நினைவேந்தல் அனுஸ்டிப்பதில் திட்டவட்டம்

### தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்மானம்

மாவீரர் நாள் நினைவேந்தலை கொரோனா சுகாதார பாதுகாப்புடன் அனுஷ்டிப்பதில் நாங்கள் திட்டவட்டமாக இருக்கிறோம் என்று இலங்கை தமிழரசு கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

03

## “உங்களுக்கு ஒரு வீடு உங்கள் நகரத்தில்”

### யாழ்.நாவற்குழியில் 100 வீட்டு குடியிருப்பு திட்டம் அங்குரார்ப்பணம்

யாழ்பாணம் - நாவற்குழி பகுதியில் இன்றையதினம் மத்தியதர குடும்பகளுக்கான வீட்டுத்திட்ட தொகுதி ஆரம்பநிகழ்வு வைபவம் இன்றையதினம் இடம்பெற்றது.

“சியபத்த வீடமைப்பு” எனும் கருப்பொருளில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் 100 வீடுகளைக் கொண்ட வீட்டுத் தொகுதியாக இது அமையவிருக்கின்றது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

03

## யாழில் அதிகரிக்கும் டெங்கு தாக்கம் தொடர்பில் ஆராய்வு



டெங்கு கட்டுப்பாட்டு மீளாய்வுக் கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட்

03

## கண்டியில் நில அதிர்வு!



கண்டியில் இன்று (புதன்கிழமை) காலை சிறியளவிளான நில அதிர்வு பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு பணியகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இன்று காலை 9.28 அளவில் இந்த நில அதிர்வு கண்டி -திகன மற்றும் பல்லேகல மத்திய நிலையத்திலும் பதிவாகியுள்ளதாக அந்தப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல குறிப்பிட்டார்.

மேலும் ரிக்டர் அளவுகோளில் 2.25 ஆக இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது என புவியியல் ஆய்வு பணியக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் இது தொடர்பில் தொடர்ந்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்கத்தொழில் பணியகத்தின் தலைவர் தெரிவித்தார்.

கண்டி, திகன பகுதியில் கடந்த செப்

03

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**



# ஒரே நாடு ஒரே மக்கள்

சுயபொருளாதாரக் கொள்கையை வலுப்படுத்தும் வகையில் வரவு செலவு திட்டம் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாட்டின் அனைத்து தரப்பினரையும் திருப்திப்படுத்தும் வகையில் 'ஒரே நாடு ஒரே மக்கள்' என்ற கோட்பாட்டை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று (செவ்வாய்க்கிழமை) சமர்ப்பிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், கொவிட் 19 ஏற்படுத்தியிருக்கின்ற பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் பாரபட்சமற்ற - ஏற்றத்தாழ்வுகள் அற்ற முறையில் நாட்டின் அனைத்து தரப்பினரையும் கவனத்தில் கொண்டு குறித்த வரவு செலவுத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக, தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தினை 1000 ரூபாயாக அதிகரித்தல் மற்றும் நுண்கடன் நிறுவனங்களைக் ஒழுங்குபடுத்தும் வகையிலான பரிந்துரை போன்ற விடயங்கள் குறித்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை, சிறுபான்மை மக்களுக்கு பொருளாதார தாக்கங்களையும் - அழுத்தங்களையும் ஏற்படுத்தகின்ற காரணிகள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டிருப்பதை வெளிப்படுத்துவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# மிகவும் பலவீனமான வரவு-செலவுத் திட்டம்!



மிகவும் பலவீனமான வரவுசெலவுத் திட்டமொன்றை அரசாங்கம் முன்வைத்துள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்கம் முன்வைத்துள்ள 2021ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் குறித்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அரசாங்கம் முன்வைத்துள்ள 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டமானது அரசாங்கத்தின் மோசமான நிலைமைகளை வெளிப்படுத்துகின்றது என தெரிவித்துள்ளார்.

நாடாக பாரிய கடன் நெருக்கடியில் உள்ள நிலையில், சர்வதேச கடன் எல்லை மீறிய ஒன்றாக காணப்படுகின்ற நிலையில், அதனை சமாளிக்கும் வரவு செலவு திட்டமாக அல்லாது மேலும் கடன்களை வாங்கும் வரவு செலவு திட்டமாகவே இது அமைந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் தனது வரவுசெலவுத் திட்ட உரையினை நிறைவு செய்யும் வேளையில், நாட்டினை அபிவிருத்தியின் பக்கம் கொண்டுசெல்லும் துரிதமாக அபிவிருத்தியடையச் செய்யும் நோக்கத்தை கொண்டுள்ளோம் எனக் கூறினார் என்றும் ஆனால் இப்போதுள்ள நிலையில் நாட்டை அபிவிருத்து செய்வதை விடவும் கடன்களில் இருந்து மீளவே போராட வேண்டியுள்ளது என்பதே உண்மையாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே மக்களை தொடர்ந்தும் ஏமாற்றும் மக்கள் மீது சுமைகளை இறக்கும் வரவு செலவு திட்டமொன்றை இன்று அரசாங்கம் முன்வைத்துள்ளது என தெரிவித்துள்ள சுமந்திரன், நாடாக இன்று பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ள நிலையில் அவற்றை எதிர்கொள்ள, சவால்களை வெற்றிகொள்ள இந்த வரவுசெலவு திட்டம் இயலுமான ஒன்றாக இல்லை என்பதே தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு எனவும் கூறியுள்ளார்.

# பாரிய கடன் பொறிக்குள் தள்ளும் வரவு செலவுத் திட்டம்



இலங்கையை பாரிய கடன் பொறிக்குள் தள்ளும் வரவு செலவுத் திட்டத்தையே அரசாங்கம் முன்வைத்துள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நாடு 13 ட்ரில்லியன் ரூபாய் கடன்களில் உள்ள நிலையில் மேலும் ஐந்து ட்ரில்லியன் சேர்கின்றது என ஜே.வி.பி. உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்சவினால் முன்வைக்கப்பட்ட நிலையில் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நாடாக முகங்கொடுக்க நேர்ந்துள்ள பொருளாதார நெருக்கடிக்கும், கொவிட்-19 வைரஸ் நெருக்கடிக்கும் முகங்கொடுக்கக்கூடிய விதத்தில் இந்த வரவு செலவுச் திட்டம் அமையவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வழமை போன்றே கடன்களை பெற்றுக்கொண்டு செலவுசெய்யும் வரவு செலவுத் திட்டமாகவே இது அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தலைவாசல் Thalaivaasal எங்கள் பாரம்பரியம்

### தினம் ஒரு ஆரோக்கிய தகவல் - 2

உணவில் அதிக உப்பை சேர்க்க வேண்டாம்.

உப்பு அதிகளவில் உள்ளெடுப்பதனால் உயர் குருதிய முக்கம், சிறுநீரக நோய்கள் போன்றவை ஏற்படலாம்.

நாள் ஒன்றிற்கு நீங்கள் எடுக்கும் உப்பின் அளவு ஒரு தேக்கரண்டியை விட குறைவாக இருப்பதனை உறுதிப்படுத்துங்கள்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீவ்**

# 77 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்

இலங்கையில் இதுவரையில் 28 ஆயிரத்து 472 குடும்பங்களைச் சேர்ந்த 77 ஆயிரத்து 531 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, சுகாதாரத் துறையுடன் இணைந்து குறித்த வீடுகளைத் தொடர்ந்தும் கண்காணித்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சூழ்நிலையில் சுய தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் வசிக்கும் பகுதிகளையும் கண்காணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், சிவில் உடைகளில் பொலிஸ் அதிகாரிகளால் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

# ன்றரை வருடங்களுக்கு மக்கள் கொரோனாவுடன் வாழ பழகிக்கொள்ளவேண்டும்

எதிர்வரும் மூன்றரை வருட காலத்திற்கு மக்கள் கொரோனா வைரஸுடன் வாழ்வதற்கு பழகிக்கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சில காலத்திற்கு வைரஸ் காணப்படும் என்பதால் இலங்கை அதனை எதிர்கொள்வதற்கான தனது அணுகுமுறையை மாற்றும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றிய




அனில் ஜெயசிங்கவையும் சுகாதார அமைச்சின் பேச்சாளராக பணியாற்றிய வைத்தியர் ஜெயருவன் பண்டாரவையும் தான் பதவி நீக்கியதாக கூறப்படுவதை நிராகரிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பெண் உயிரிழப்பு!

வவுனியா மறவன்குளத்தில் தனிமைப்படுத்தப்பட்ட வீட்டில் இருந்த 58 வயது பெண் மரணமடைந்துள்ள நிலையில் அப் பெண்ணின் உடலில் இருந்து பெறப்பட்ட மாதிரிகள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக மரண விசாரணை அதிகாரி க. ஹரிப்பிரசாத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், "வவுனியா மறவன்குளத்தில் வசிக்கும் பெண்ணொருவரின் இரு பிள்ளைகள் கொழும்பு பகுதியில் இருந்து கடந்த 9ஆம் திகதி வருகை தந்த நிலையில் குறித்த குடும்பம் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த இருவருக்கும் பி.சி. ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படாத நிலையில் தயாராருடன் வசித்து வந்த நிலையில் தாயார் நேற்று (செவ்வாய்கிழமை) உடல்நலக்குறைவு காரணமாக மரணித்துள்ளார்.

இந்நிலையில் மரண விசாரணையின் போது குறித்த பெண் மற்றும் அவரது பிள்ளைகள் தனிமைபப்படுத்தப்பட்டிருந்தபோதிலும் வவுனியா வைத்தியசாலைக்கு கடந்த 12 ஆம் திகதி காய்ச்சலுக்கு சிகிச்சை பெற குறித்த பெண் சென்று வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

குறித்த பெண் மரணித்தமைக்கான காரணத்தினை அறிந்துகொள்வதற்காக பி.சி.ஆர் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதுடன் அவரது உடலில் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு பரிசோனைக்கு அனுப்பட்டுள்ளது. இரு பிள்ளைகளுக்கும, பேரனுக்கும் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ள மாதிரிகள் பெறப்பட்டுள்ளது.

எனினும் இறந்த பெண்ணின் சடலம் உடனடியாக தகனம் செய்யப்பட்டுள்ளதுடன் பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னரே மரணத்திற்கான காரணம் தெரியவரும் என்றார்.

# யாழில் சீரற்ற காலநிலையால் 22 குடும்பங்கள் பாதிப்பு!

கடந்த 24 மணித்தியாலங்களில் யாழ் மாவட்டத்தில் காணப்பட்ட காற்றுடன் கூடிய மழை தாக்கத்தின் காரணமாக 22 குடும்பங்களைச் சேர்ந்த 83 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் சூரியராஜ் தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதியிலிருந்து இன்றைய தினம் வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்பட்ட காற்றுடன் கூடிய மழையின் தாக்கத்தின் காரணமாக 22குடும்பங்களைச் சேர்ந்த 83 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 16 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் மூன்று வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதாகவும் நல்லூர், கோப்பாய் தெல்லிப்பளை, பருத்தித்துறை, சண்டிலிப்பாய்,கரவெட்டி, பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அனர்த்தத்தினால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பாதிப்புகள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ் மாவட்டஅனர்த்தமுகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்

# மாவீரர் நினைவேந்தல் வழக்கு: சுமந்திரம் இணைகிறார்

மாவீரர் நாள் நிகழ்வுகளை தடை செய்யக் கூடாது என உத்தரவிடக்கோரி மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்குகள் வெள்ளிக்கிழமை விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்ட இரு வழக்குகளை வெள்ளிக் கிழமை விசாரணைக்கு எடுக்குமாறு வழக்காளர் சார்பு சட்டத்தரணிகள் கோரியிருந்தனர்.

இந்த வழக்குகளில் கப்டன் பண்டிதரின் தாயாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சட்டததரணி வி.மணிவண்ணனும் மக்களிற்கான நீதி சட்டத்தரணிகள் கூட்டின் ஏற்பாட்டாளர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் இன்னொரு வழக்கிலும் ஆயராகவுள்ளனர்.

மாவீரர் நாள் நிகழ்வுகளை தடை செய்யக் கூடாது என உத்தரவிட வேண்டும் என மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்குகள் இரு வழக்குகளில் வல்வெட்டித்துறையை சேர்ந்த ஒருவர் தனியான வழக்காகவும் மேலும் எண்மர் இணைந்து ஒரு வழக்கு என மொத்தம் இரு வழக்குத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழ். பல்கலை...

வதற்கு பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை பரிந்துரை செய்துள்ளது.

இதனடிப்படையில், நேரடியாகக் குற்றங்களில் ஈடுபட்ட, பல்கலைக்கழகத்தின் பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்ட மூன்றாம் வருட மாணவர்களுக்கு அவர்கள் செய்த குற்றங்களின் தன்மைக் கேற்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 946 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் அடிப்படையில் விசாரணை அதிகாரியினால் வகைப்படுத்தப்பட்ட தண்டனைகள் சிபார்சு செய்யப்பட்டிருந்தன. அவரது முன்மொழிவுகளைப் பேரவைக்குச் சிபார்சு செய்வதென இன்று புதன்கிழமை இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் வருட மாணவர்கள் 3 பேருக்கு ஒரு வருட காலத்துக்குப் பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கான தடையும், 4 பேருக்கு ஆறு மாத காலத்துக்குப் பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கான தடையும் விதிக்கப்படுவதோடு, தண்டனைக்குரிய 7 பேருக்கும் வழங்கப்படும் அத்தனை நிதியுதவிகளும் நிறுத்தப்படல் வேண்டும், கல்வி கற்கும் காலத்தினுள் விடுதிகளில் தங்குவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட வேண்டும், மாணவர் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களில் பதவிகள் எவையும் வழங்கப்படகூடாது போன்ற தண்டனைகள் விசாரணை அதிகாரியினால் சிபார்சு செய்யப்பட்டிருந்ததன. எனினும் இவற்றில் மாணவர்களுக்கான நிதியுதவிகளை நிறுத்துவதை தவிர ஏனைய சிபார்சுகளைப் பேரவைக்குப் பரிந்துரைப்பதற்கு பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை முடிவு செய்துள்ளது.

இந்த 7 பேர் தவிர, கடந்த மாதம் 10 ஆம் திகதி முதல் உள்நுழைவதற்குத் தடைவிதிக்கப்பட்ட ஏனைய 14 பேருக்கும் அவர்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் உள் நுழைவுத் தடை விலக்கப்படவேண்டும் என்பதுடன், துணைவேந்தரினால் சம்பவம் தொடர்பில் எச்சரிக்கை வழங்கப்பட வேண்டும் என்றும், கல்வி கற்கும் காலத்தினுள் விடுதிகளில் தங்குவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட வேண்டும், மாணவர் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களில் பதவிகள் எவையும் வழங்கப்படகூடாது போன்ற தண்டனைகளும் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ள பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. பேரவையின் இறுதித் தீர்மபனத்தின் அடிப்படையில் மாணவர்களுக்கான தண்டனைகள் துணைவேந்தரினால் அறிவிக்கப்படும்.

கடந்த மாதம் 8 ஆம் திகதி இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணவர்களுக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் பெரும் மோதலாக உருவெடுத்திருந்தது. அதனைத் தொடர்ந்து சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என கலைப்பீடச் சபையினால் அடையாளப்படுத்தப்பட்ட 21 மூன்றாம் வருட மாணவர்களுக்கு மறு அறிவித்தல் வரை பல்கலைக் கழகத்தினுள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பேராசிரியர் எம். நடராஜசுந்தரத்தை விசாரணை அதிகாரியாகக் கொண்ட தனிநபர் ஆயம் ஒன்று பேரவையினால் நியமிக்கப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. சம்பவத்துடன் தொடர்புபட்ட இரண்டாம் வருட, மூன்றாம் வருட மாணவர்கள் மற்றும் சம்பவத்தை நேரில் கண்ட அதிகாரிகள், அலுவலர்கள் அனைவரும் விசாரணை செய்யப்பட்டு கடந்த 11 ஆம் திகதி 130 பக்கங்களைக் கொண்ட முழுமையான அறிக்கை துணைவேந்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### மாட்டுப்பண்ணை...

இதுதொடர்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

மட்டக்களப்பு மாவட்டம் மயிலத்தைமடு பெரியமாதவனை பகுதியில் அமைந்துள்ள மேச்சல்தரை நிலப்பகுதியில் கடந்த ஒகஸ்ட் மாதம் தொடக்கம் சோளப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவரும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த விவசாயிகளால் பண்ணையாளர்களுக்க உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படுவது தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

கடந்த இரண்டரை மாதங்களாக பண்ணையாளர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த நவம்பர் 15ஆம் திகதி அன்று குறித்த மேச்சல் நிலப்பகுதியில் தங்கியிருந்த பண்ணையாளர்களது இருப்பிடங்களைத் தேடி வாள்கள் கத்திகளுடன் சென்ற பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று நாள் காலக்கெடுவுக்குள் அனைத்துப் பண்ணையாளர்களும் அவர்களது கால்நடைகளுடன் அங்கிருந்து வெளியேறிவிட வேண்டுமெனவும் இல்லையேல் கொலை செய்வோம் என்றும் அச்சுறுத்தியுள்ளனர்.

இந்த அச்சுறுத்தல் செயற்பாடுகள் தொடர்பில் செய்திகளை சேகரித்து வெளியிட்ட மட்டக்களப்பு ஊடகவியலாளர் செ.நிலாந்தன் பொலிஸாரினால் விசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

பண்ணையாளர்கள் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் கரடியனாறு பொலிஸ் நிலையத்திலும் மட்டக்களப்பு மனித உரிமைகள் அலுவலகத்திலும் பண்ணையாளர்களால் முறையிடப்பட்டுள்ளது. எனினும் இதுவரை பொலிஸாரினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பண்ணையாளர்கள் எதிர்நோக்கியுள்ள உயிர் ஆபத்து நிலை தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகருடன் இன்று (நவ.18) தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலமைகளை தெரியப்படுத்தியுடன் கரடியனாறு பொலிஸார், பண்ணையாளர்கள் மேற்கொண்ட முறைப்பாடுகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதனையும் சுட்டிக்காட்டி பண்ணையாளர்களது பாதுகாப்பினை உறுதிப் படுத்துமாறும் அவர்கள் தொழில் செய்வதற்கு பெரும்பான்மையினத்தவர்களால் விடுக்கப்படும் நெருக்கடிகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தார்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கு அவசர கடிதம் ஒன்றினையும் அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் பண்ணையாளர்களை பாதுகாப்பதற்கு உடனடியாகத் நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார் - என்றுள்ளது.

### மாவீரர் நாள்...

அத்துடன் அதற்கான வழிமுறைகளை கூடி ஆராய்ந்து அடுத்த வாரம் அறிவிப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கட்சிகளின் சர்வகட்சிக்கூட்டம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வி. கே.சிவஞானத்தின் இல்லத்தில் இன்று மாலை நடைபெற்றது. இக்கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர் தமிழ் தேசிய கட்சிகள் இன்று கூடி முக்கிய இரண்டு விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து இருக்கின்றன. தமிழ் கட்சிகளுக்கு இடையிலான ஒற்றுமை மற்றும் மாவீரர் நாள் நினைவேந்தல் என்பன ஆகும்.

மாவீரர் நாள் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்பதுடன் அதுகுறித்து இன்னும் சில தினங்களில் அறிக்கை ஒன்றை வெளியிட இருக்கின்றோம். அதேசமயம் இது தொடர்பில் அரசாங்கத்துடன் பேசுவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் சிவாஜிலிங்கம், உட்பட பல கட்சிகளின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

### கண்டியில்...

டம்பர் மாதமளவில் ஏற்கனவே இரண்டிற்கும் குறைவான சிறிய நடுக்கங்கள் பதிவாகியிருந்தன.

இதனையடுத்து இந்த நில அதிர்வு குறித்து ஆராய புவியலாளர்கள் குழுவொன்று நிமிக்கப்பட்டது.

குறித்த குழுவின் அறிக்கையில், நில நடுக்கம் பூமிக்குள் ஆழமான சுண்ணாம்புக் கற்களின் இரண்டு அடுக்குகளுக்கு இடையில் கட்டமைக்கப்பட்ட அழுத்தத்தினால் ஏற்பட்ட வெடிப்பின் விளைவாக ஏற்பட்டது என தெரிவிக்கப்பட்டிருந்ததாக குறித்த பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

### 30 நிமிடங்களுக்குள்...

இன்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திபில் ,தொற்று நோயியல் பிரிவின் பிரதானி விசேட மருத்துவர் சுதத் சமரவீர இதுதொடர்பாக தெரிவிக்கையில், இந்த பரிசோதனைகளை மேற்கொள்ளுவதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்கியிருப்பதாக தெரிவித்தார்.

இன்று முதல் தெரிவு செய்யப்பட்ட குழுவினருக்கு அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிடார்..

பயிற்சியளிக்கப்பட்டவர்கள் இந்த சோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர் 20 தொடக்கம் 30 நிமிடங்களில் முடிவுகள் தெரியவரும் என அவர் கூறினார்.

வைத்தியசாலைகளுக்கு வரும் கொரோனா நோய்க்கான அறிகுறிகளை உடையவர்களையும் சோதனைக்கு உட்படுத்தவுள்ளதாகவும் தொற்றுநோயியல் பிரிவின் பிரதானி விசேட மருத்துவர் சுதத் சமரவீர மேலும் தெரிவித்தார்

### யாழில் அதிகரிக்கும்...

அவர்களும் கலந்து கொண்டார்.

இக் கலந்துரையாடலில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், பிராந்திய தொற்றுநோயியல் வைத்திய அதிகாரி, பிராந்திய பொதுசுகாதார பரிசோதர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பொலீஸ் தரப்பினர் மற்றும் துறைசார் சுகாதார தரப்பினர் கலந்து கொண்டனர்.

### உங்களுக்கு...

மற்றும் கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிட பொருட்கள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பிரதமர் மகிந்த ராஜபக்சவின் பிறந்த தினத்தை முன்நிட்டு குறித்த வீட்டுத்திட்டம் நாடு பூராகவும் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் மு. ரவீந்திரன், சாவகச்சேரி பிரதேச செயலாளர் திருமதி எஸ். உசா, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மண்ற உறுப்பினர்கள், மத தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### தடையை உடைத்து...

உயிரிழந்த குடும்ப உறுப்பினர்களை நினைவு கூருவதனை யாரும் தடுக்க முடியாது .அதே போல எமது குடும்ப உறுப்பினர்களை நினைவு கூருவதற்கு நாம் யாரிடமும் அனுமதியும்பெறதேவையில்லை.

எனவே எதிர்வரும் நவம்பர் 27 மாவீரர் தினம் நினைவேந்தல் நிகழ்வு வழமைபோல் இடம்பெறும். எத் தடைவரினும் அத் தடையை உடைத்து மக்கள் அனைவரும் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப ஒன்று கூடி இந்த மாவீரர் தின நிகழ்வை வழமைபோன்று நடத்துவோம் தம்மை கைது செய்தால் கைது செய்யட்டும் ஆனால் மாவீரர் தின நிகழ்வை நடாத்துவோம் எனவும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

### கட்டாய கலியாணம்...

வதற்கு காத்திருக்க முடியாது. என பகிரங்கமாகவே கூறியுள்ளன. இதேவேளை தமிழ்தேசிய மக்கள் முன்னணி தலைமைகள் தமிழ்தேசிய கட்சிகளின் பல கூட்டங்களில் கலந்துகொண்டிருக்கவில்லை.

தலைவாசல்
எங்கள் பாரம்பரியம்
Thalaivaasal



# கொரோனா பாதிப்பு 18,000ஐ கடந்தது!



நாட்டில் மேலும் 398 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்டவர்கள் அனைவரும் ஏற்கனவே தொற்று கண்டறியப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 568ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 18 ஆயிரத்தைக் கடந்து 18 ஆயிரத்து 72ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து இன்று மட்டும் 404 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில் இதுவரை 12 ஆயிரத்து 210 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் ஐயாயிரத்து 801 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.



# கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் 05 வைத்தியர்களுக்கு கொரோனா!




கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் பணி புரியும் 05 வைத்தியர்கள் உள்ளிட்ட 15 ஊழியர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.விஜேசூரிய இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இதுவரையில் வைத்தியசாலையில் 60 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "குறித்த தொற்றாளர்களில் எவருக்கும் வைத்தியசாலையினுள் தொற்று ஏற்படவில்லை.

குறித்த அனைவருக்கும் வெளி பிரதேசங்களில் இருந்து தொற்று ஏற்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் 80 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# காதலர் தினத்தன்று மனைவியை கொன்றவருக்கு மரண தண்டனை

## நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு

காதலர் தினத்தன்று தனது மனைவியை பெற்றோல் ஊற்றி கொலை செய்த ஒருவருக்கு மரண தண்டனை விதித்து திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியன் மரண தண்டனை விதித்து இன்று (18) தீர்ப்பளித்தார்.

38ஃ1, பாடசாலை மாவத்தை, ஆண்டாம்குளம், திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய கெந்த கேவாகே அனுர இசாந்த என்பவருக்கே இவ்வாறு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018.02.14 ஆம் திகதி கந்தளாய் அக்போபுர பகுதியைச் சேர்ந்த குலசேகர முதியன்சாலாகே ரேணுகா எனும் தனது மனைவியை காதலர் தினத்தன்று பெற்றோல் ஊற்றி தீ வைத்து கொலை செய்த குற்றத்திற்கெதிராக

கெந்த கேவாகே அனுர இசாந்த என்ற எதிரிக்கு எதிராக சட்டமா அதிபரினால் 2019.04.12 ஆம் திகதி திருகோணமலை மேல் நீதிமன்றில்

மரணத்தை விளைவித்த குற்றச்சாட்டின் இலங்கை தண்டனை சட்டக்கோவை கொலை குற்றச்சாட்டின் கீழ் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

அவ் வழக்கு தொடர்பான இரு தரப்பு வழக்கு விசாரணைகளும், அதற்கான தொகுப்புரைகளும் நிறைவு செய்யப்பட்டதையடுத்து

இன்றைய தினம் குறித்த வழக்குக்கான தீர்ப்பு திறந்த நீதிமன்றில் எதிரி மற்றும் அரச சட்டத்தரணி,



முன்னிலையில் வாசித்து காண்பிக்கப்பட்டு எதிரி குறித்த குற்றச்சாட்டுக்கு குற்றவாளியாக இணங்காணப்பட்டதையடுத்து எதிரிக்கு மரணதண்டனை விதித்து திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

# துறைமுக அதிகார சபையின் அத்தியாவசிய பொது சேவையாக பிரகடனம்

துறைமுக அதிகார சபையின் பணிகளை அத்தியாவசிய பொது சேவையாக பிரகடனப்படுத்திய விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவிற்கு அமைய, ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கைத் துறைமுக அதிகார சபையினால் அதற்கமைவாக மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது தேவைப்படும் எந்தவொரு தன்மையிலான சேவையின் சகல சேவைகள் மற்றும் வேலைகள் மற்றும் தொழில் பங்களிப்பு அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸாருக்கு கொரோனா: 785ஆக அதிகரிப்பு!

பேராதனை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவு அதிகாரி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த பொலிஸ் அதிகாரி மற்றும் அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளான பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 785 ஆக அதிகரித்துள்ளது.

# போகம்பறை சிறையிலிருந்து தப்ப முயன்றவர் உயிரிழப்பு!

கண்டி பழைய போகம்பறை சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 5 கைதிகள் தப்பிச் செல்ல முயற்சித்த வேளை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கண்டி பழைய போகம்பறை சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 5 கைதிகள் தப்பி செல்ல முற்பட்டுள்ளனர். அதன் போது ஒருவர் உயிரிழந்துள்ளார். ஏனைய நால்வரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ள



நிலையில் ஒருவர் தப்பி ஓடியுள்ளார். தப்பியோடிய கைதியை கைது செய்யும் முகமாக தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

குறித்த சிறைச்சாலையில் 800இற்கும் அதிகமான கைதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதில் 30 கைதிகள் மற்றும் இரு அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.